NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 7 October 2022

# கடந்த ஆண்டு பிள்ளைகளைத் திருத்தும் நோக்கில் 40% பெற்றோர் அடித்தனர்

பிள்ளைகளைத் திருத்துவதற்காக 40 விழுக்காட்டுப் பெற்றோர் கடந்த ஆண்டு, அடித்தல், அறைதல் போன்ற ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை ஒருமுறையாவது மேற்கொண்டதாகப் புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அத்தகையோரில் ஏறக்குறைய 30 விழுக்காட்டினர் அடிக்கடி அவ்வாறு பிள்ளைகளைத் தண்டித்ததாகவும் ஆய்வு கூறுகிறது.

ஆய்வில் 767 பெற்றோர் கலந்துகொண்டனர். உளவியல்ரீதியான ஒழுங்குபடுத்தும் முறைகளைக் கையாண்டதாக ஆய்வில் கலந்துகொண்ட 80 விழுக்காட்டினர் குறிப்பிட்டனர்.

ஆய்வில் பங்கெடுத்த அனைவருமே உடல்ரீதியாகத் துன்புறுத்தாத நடைமுறைகளைப் பின்பற்றியதாகவும் தெரிவித்தனர். உரக்கத் திட்டுதல், அவமதிக்கும் சொற்களைக் கூறுதல் போன்றவை உளவியல்ரீதியான நடைமுறைகளில் அடங்கும். எடுத்துக்கூறிப் புரியவைத்தல், திருந்தி நடப்பதற்காக சிறு பரிசுகள் அளித்தல் போன்றவை உடல்ரீதியான துன்புறுத்தல் அல்லாத நடவடிக்கைகளில் அடங்கும்.

ஆய்வின் ஓர் அங்கமாக, தாங்கள் சிறுவயதில் எதிர்கொண்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகளைப் பற்றி 692 இளையர்களிடம் கேட்கப்பட்டது. சிங்கப்பூர் சிறுவர் சங்கமும் யேல்-என்யுஎஸ் கல்லூரியும் நடத்திய ஆய்வில் கலந்துகொண்ட பெரும்பாலான பெற்றோர், உடல்ரீதியாகத் துன்புறுத்தும் தண்டனைகள் பலன் தரவில்லை என்றனர்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.